இணைப்பு I *

[886-ம் பக்கத்தில் 247 எண்ணுள்ள நட்சத்திரக் குறியிட்ட கேள்விக்கான பதிலைக் காண்க.]

மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் தமிழ்மொழி வளர்ச்சிக்காக தமிழ்நாடு அரசாங்கம் வழங்கிய மானியத் தொகையைக் காட்டும் விவர அறிக்கை :—

பகுதி—1

" கற்காலத்தில் இந்திய மொழிகளின் வளர்ச்சி " குறித்த இந்திய அரசாங்கத் திட்டத்தின்கீழ் வழங்கப்பட்டுள்ள மானியங்கள்.

திட்டங்கள். (1)	வழங்கிய தொகை. (2)
1 தமிழில் சிறுவர் கலைக் களஞ்சியம் ஒன்றைத் தொகுத்து வெளியிடுதல் (சென்னைத் தமிழ் வளர்ச்சிக் கழகம் மேற்கொண்டுள்ள திட்டம்).	ரூபாய் 50,000 (1965-66-ம் ஆண்டில்).
2 சங்க இலக்கியங்கள் எல்லாவற்றுக்கும் தெளிவான உரைகள் வெளியிடுதல் (சென்னை மாநிலத்தில் தமிழ்ச் சங்கம் மேற்கொண்டுள்ள திட்டம்).	ரூபாய் 7,800
3 " நாம் வாழும் வழி " (The way we live) என்னும் புத்தகத்தைத் தமிழில் வெளியிடுதல்.	ரூபாய் 825
4 கல்வெட்டுகளை ஆராய்தல், பொருள் விளக்கம் காணல், தமிழில் அவற்றை வெளியிடல், சைவ வைணவ வரலாற்றை வெளியிடுதல் (சென்னை தமிழ் வரலாற்றுக் கழகம் மேற்கொண்டுள்ள திட்டம்.)	ரூபாய் 35,000 (1965-66-ல்)
5 சென்னை தமிழ் வளர்ச்சிக் கழகம் தமிழ்க் கலைக் களஞ்சியத்திற்கு முதல் பிற்சேர்க்கையை வெளியிடுதல்.	ரூபாய் 46,500.

* இந்த இணைப்பின் ஆங்கில மொழிபெயர்ப்பிற்கு 887–888-ம் பக்கங்களைக் காண்க.

9th August 1966]

பகுதி—2

பிற திட்டங்களுக்கு வழங்கப்பட்ட மானியங்கள்.

திட்டங்கள். (1)	வழங்கிய தொகை. (2)
1. தமிழ்க் கலைமன்றம் ''தமிழ்ப் பண்பாடு'' (Tamil culture) என்னும் பத்திரிகையை வெளியிடுதல்.	ரூபாய் 14,708. (இந்த நிறுவனத்திற்கு ஏற்பட்ட நிகர பற்றுக்குறை முழுவதையும் ஈடுகட்டுவதற்காக அளிக்கப்பட்டுள்ள நடைமுதல் மானியம் இது 3,500 ரூபாய் வரம்புக்குட்பட்டதாகும்).
2. தமிழில் சிறந்த நூல்களுக்குப் பரிசு வழங்குதல் (தமிழ் வளர்ச்சி ஆராய்ச்சி மன்றம் மேற்கொண்டுள்ள திட்டம்.	ரூபாய் 10,000.
3. அயல் நாட்டவர்களுக்கு விஞ்ஞான (நவீன) முறைகளில் தமிழ் வகுப்புகள் நடத்துதல் (தமிழ்க் கலை மன்றம் மேற்கொண்ட திட்டம்).	ரூபாய் 1,500
4. தென் மொழிகள் புத்தக டிரஸ்ட் நான்கு தென்னிந்திய மொழிகளில் புத்தகங்கள் வெளியிடுதல்.	ரூபாய் 60,000.
5. ஸ்ரீ எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் அவர்கள் சோழர்கள் கால அருங்கலையிலும் கட்டிடக் கலையிலும் நடை உருவாகி வளர்ந்ததைக் குறித்து நூலொன்றை வெளியிட்டதற்கு.	ரூபாய் 2,500.
6. தமிழ் வெளியீட்டுக் கழகத்தை நடத்துதல்.	ரூபாய் 11,50,000.
7. திருவாசகம், திருக்குறள், நாலடியார் ஆகியவற்றுக்கு எளிய விளக்க உரைகள் தயாரித்தல் (சொல்லடைவு) (Lexicon) பொருளடைவு (Concordance) இவற்றோடு (ஐந்தாண்டுத் திட்டம்) (சென்னை மாநிலத் தமிழ்ச் சங்கம் மேற்கொண்டுள்ள திட்டம்).	ரூபாய் 6,000.
8 20-ம் நூற்றாண்டுத் தமிழ் இலக்கியம்-(8 தொகுதிகள்) தயாரித்து அச்சிடுவதற்காக (சென்னை மாநிலத் தமிழ்ச் சங்கம் மேற்கொண்டுள்ள திட்டம்).	ரூபாய் 8,000.